**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 107/2018**

**வாதி தரப்பு சாட்சி- 1 முருகவேல், திருமதி. S.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 09.06.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) சர்வே எண் 1194/5, 1571/1, 1571/4, 1573/3, 1573/5 ஆகிய நிலங்கள் பெருமாள் நாயக்கர் பெயரில் பட்டா எண் 829 ஆக உள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலங்கள் எனக்கு பட்டா நிலங்களை ஒட்டி ரோடு ஓரமாக உள்ள புறம்போக்கு நிலங்கள் என்றால் சரிதான். மேற்படி இடத்தில் பெருமாள் நாயக்கர் வைக்கோல் போர் அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. சர்வே எண் 1192/8 ல் 1 ஏக்கர் 39 சென்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு மட்டக்கிணறு உள்ளது என்றால் சரிதான். மழைக்காலங்களில் தண்ணீர் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை. மேற்படி நிலங்களில் தென்வடல் பொழி போட்டு தனியாக பிரித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, ஒன்றாகத்தான் அனுபவித்து வருகிறோம்.

2) நான் சொல்வது தவறு என்றும், ஏற்கனவே தென்வடல் பொழி போட்டு பிரிக்கப்பட்டு, மேற்கே தம்மாநாயக்கர், அதற்கு கீழ்புறம் பெருமாள் நாயக்கருக்கும், அதற்கு கீழ்புறம் கொண்டமநாயக்கருக்கும், அதற்கு கீழ்புறம் எனது தகப்பனார் பழனிச்சாமிக்கும் பாகம் ஒதுக்கப்பட்டு, தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. சர்வே எண் 1194/11 ஏற்கெனவே கிழமேல் பொழி போட்டு பிரிக்கப்பட்டு, வடபுறம் என் தகப்பனார் பழனிச்சாமிக்கும், அதற்கு தென்புறம் கொண்டமநாயக்கருக்கும், அதற்கு தென்புறம் பெருமாள் நாயக்கருக்கும், அதற்கு தென்புறம் தம்மாநாயக்கருக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

3) இதன் மொத்த விஸ்திரம் 3 ஏக்கர் 79 சென்ட் நிலம் என்றால் சரியாக தெரியவில்லை. 3 ஏக்கர் 79 சென்ட் நிலத்தில் உள்ள கிணற்றில் பெருமாள் நாயக்கர் பெயரில் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் கொடுக்கப்பட்டு, அதனை நான் ஆட்சேபனை செய்ததால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி

நிலத்திற்கு மேற்குபுறம்தான் ரோட்டை ஒட்டி பெருமாள் நாயக்கர் நிலம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 1575/5 ல் 1 ஏக்கர் 67 சென்ட் நிலத்தில் கிழமேல் பொழி போட்டு தனியாக பாகம் பிரித்து பழனிச்சாமி, பெருமாள் நாயக்கர், தம்மாநாயக்கருக்கு மட்டும பாகம் பிரிக்கப்பட்டது என்றும், அதில் வடபுறம் எனது தகப்பனார் பழனிச்சாமிக்கும், அதற்கு தென்புறம் பெருமாள் நாயக்கர், அதற்கு தென்புறம் தம்மாநாயக்கர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டு, தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

4) மேற்படி இடத்தில் கொண்டமநாயக்கருக்கு பாகம் ஒதுக்காமல், அதற்கு ஈடாக சர்வே எண் 1573/7A வில் 59 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பொதுவாகத்தான் நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம். 17.04.2013 ல் சின்னமநாயக்கர், செல்லப்ப கோனாரிடம் இருந்து முருகவேல், வேலுச்சாமி, பாலசரவணன் மூவரும் சேர்ந்து 3 ஏக்கர் 68 சென்ட் இடத்தை கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி நிலம் T.இடையப்பட்டி, கீழ்ப்பாகம் கிராமத்தை சேர்ந்தது என்றால் சரிதான். மேற்படி கிரையத்தில் சர்வே எண் 1183/1A, 1184/2A, 1181/2A, 1181/9. 1184/1, 1184/2C, 1183/2, 1184/3 ஆகிய நிலங்களில் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி நிலங்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அதை நாங்கள் கிரையம் பெற்றதால் சேர்க்கவில்லை. மேற்படி கிரைய ஆவணத்தில் பிரதிவாதிகளுக்கு பாகம் உள்ளதா என்றால் அவர்களுக்கும், இதற்கும் சம்பந்தமில்லை.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**